**மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம் - 2021**

மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு செயற்திட்ட நிர்வாக கைநூலின் V (D) ஆம் பிரிவு மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3585- எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 ஆம் உறுப்புரையின் IV ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. (அ) காற்றலை மின்வலு உருவாக்கல் அதிகரிபத்தல், (ஆ) மீள்சுழற்சி மின்வலு முகாமைத்துவ முறைமை முன்னேற்றம், (இ) செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வையில் கடன் பெறுபவரின் இயலளவை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,923.06 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 256.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,104.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,818.22 மிலலியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 56.70 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. சேயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 மார்ச் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | ரூபா மில்லியன் | | |
| (அ) | 2021 திசெம்பர் 31 வரை 12 வாகனங்கள் தொடர்பில் ரூபா 47.67 மில்லியன் தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு பெறுமானத் தேய்வு ஏற்பாடாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை மின்சார சபை மூலதனப் பங்களிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 47.67 | செயற்திட்டத்தின் நிதிக் கூற்றில் இது தொடர்பில் புறம்பாக வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது. | திரண்ட பெறுமானத் தேய்வு முறைப்படி கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டம் மற்றும் இலங்கை மின்சார சபையின் வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலம் மீளாய்வாண்டின் போது 7 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகளாக திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்விலிருந்து கழிப்பதன் மூலம் நடைமுறையாண்டு நிதிக் கூற்றுக்களில் செயற்திட்டத்தின் வாகனங்களில் ரூபா 22.02 மில்லியன் தொகையான பெறுமானத் தேய்வின் மொத்த தாக்கம் சீராக்கப்பட்டிருந்தது. | 22.02 | பெறுமானத்தேய்வின் தாக்கம் நாடைபெறும் வேலை மற்றும் இலங்கை மின்சார சபை பங்களிப்பிலுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது முக்கியத்துவற்றதாக உள்ளதென கருதப் பட்டிருந்தமையால் நாங்கள் முன்னைய காலப்பகுதி வெளிப்படுத்தல்களை செய்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிக்கூற்றுக்களைப் போல முழு நிதிக்கூற்றுக்களிற்கும் ஒரே கணக்கீட்டுக் தத்துவங்களைப் பிரயோகிக்க வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் 05 ஆம் இலக்கம் மற்றும் 02/2016 ஆம இலக்க திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு அமைய உள்ளகக் கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை | இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் 2017 இல் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்காக விரிவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் மீதன உள்ளக கணக்காய்வு ஒழுங்காக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED 03/2016 | செயற்திட்டமானது உரிய ஊழியர்களின் | இலங்கை மின்சார சபை 2020 ஒக்தோபர் வரை | PAYE வரி ஊழியர்களால் ஏற்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந்திகதிய SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை | சம்பளங்களிரிலிருந்து கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து ரூபா 15.76 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் வரி மீதான வரியை 2020 ஒக்தோபர் வரை செலுத்தியிருந்தது. | மாத்திரம் PAYE வரியை ஏற்றிருந்தது. 2020 நவம்பரிலிருந்து APIT சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊழியர்களால் ஏற்கப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 1/2016 ஆந் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு. | ஏற்பாட்டிற்கு முரணாக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 31.87 மில்லியன் தொகையான விடுமுறை கொடுப்பனவு மற்றும் மிகையூதியம் செயற்திட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை மின்சார சபை கொள்கை மற்றும் வழிகாட்டல்களிற்கமைய சகல இலங்கை மின்சார சபை ஊழியர்களிற்கும் இது உள்ளது. | சபையானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாக கைநூலின் VC (31) ஆம் பிரிவு | செயற்திட்டத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளிற்கு புறம்பான காசுப் புத்தகம் பேணுவதற்குப் பதிலாக செயற்திட்ட பிரிவின் பொதுக் காசுப் புத்தகத்தில் பதியப்படுகின்றன. | தற்போது செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது டன் மின்வலுப் பொறி பரீட்சித்து ஒப்படைக்கப்பட்டது. ஆகவே, இந்த கட்டத்தில் வங்கிக் கணக்கு திறத்தல் சாத்தியமற்றிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டு புறம்பான காசுப் புத்தகம் பெறமுடியும். | செயற்திட்ட நிர்வாக கைநூலில் வேண்டப்பட்டவாறு புறம்பான காசுப் புத்தகம் பேணப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | தாமதம் / கணக்காயவு அவதானிப்புகள் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| இயலளவு அதிகரிக்கப்பட்ட காற்றலை மின்வலு உருவாக்கல் | 100 | 100 | ஆரம்ப பட்டியலிட்ட பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பராக இருந்த போதிலும் இது 2021 மார்ச் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. நீண்ட கால குறைந்த கிரய உருவாக்கல் | செயற்திட்டத்தால் கோரப்பட்ட சில விடயங்கள் 1985 இன் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987 இன் 28 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி அதிகாரச்சட்டத்தை திருத்தி வழங்கப்பட்ட 2020 ஏப்ரல் 16 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திட்டத்தில் நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | ஆந் திகதிய 2171/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி மூலம் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த முக்கியமான விடயங்களை செயற்படுத்துவதற்கு அதிகாரிகளிடமிருந்தான அனுமதிகள் பெறுதல் குறிப்பிடத்தக்களவு காலத்தை எடுத்திருந்தது. |
| முன்னேற்றப்பட்ட மின்சார முகாமைத்துவ முறைமையை மீள்செயற்படுத்தல் | 100 | 98 | ஆரம்ப பட்டியலிட்ட பூர்த்தியாக்கல் திகதி 2021 சனவரியாக இருந்த போதிலும் இது 2022 ஏப்ரல் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | வெளிநாட்டு பயணங்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள் மற்றும் மேற்பார்வை யாள்களுடைய வருகைக்கு நிகழ்ந்த தாமதங்கள். |

**முகாமைத்துவத்தின் பதில்** தாமதங்களிற்கான ஒரே காரணங்கள்.

**கணக்காய்வளருடைய சிபார்சுகள்** தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு திட்டமிட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்க வேண்டும்.

### 3.2 காணிச் சுவீகரிப்பு தொடர்பான விடயங்கள்

| இல | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | **சுவீகரிக்க வேண்டுமென எதிர்பாரக்கப்பட்டவை** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்பட்டவை** | **உரிமையாண்மை மாற்றப்பட்டவை** | | |
| (அ) | கொள்வனவு செய்யப்பட்ட WTG அமைவிடங்கள் (1) | 1 | 1 | கவனத்திற் கொள்ளப்பட்டது | எதிர்காலத்தில் பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு உடனடியாக காணிகளின் உரிமையாண்மை மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | WTG அமைவிடங்கள் (38) (101 இணைந்த துண்டுகள்) | 38 (101 இணைந்த துண்டுகள்) | 47 இணைந்த துண்டுகள் | | |
| (இ) | நுழைவு வீதிகள் (7) | 7 | 4 | | |
| (ஈ) | வதிவிடப் பிரிவு (1) | 1 (4 இணைந்த துண்டுகள்) | 2 இணைந்த துண்டுகள் | | |